# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1829/36 - 2013 සැප්තැම්බර් 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.09.26

*1829/36 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

*ச. வ. பி. 21/1978 (x)*

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்*

**27 (1) (ஆ) என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும்**
**25 (அ) என்னும் பிரிவின் கீழான கட்டளை**

**அறிவித்தல்**

*1978ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) (ஆ) என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70 இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, சவுத் ஏசியன் இன்ஸ்ரிரியுற் ஒவ் ரெக்னொலொஜி அன்ட் மெடிசின் (பிறைவேட்) லிமிற்றெற்றை (SAITM) மருத்துவமாணி மற்றும் அறுவை மருத்துவமாணி பட்டத்தை (எம்.பீ.பீ.எஸ்) அளிப்பதற்கு இட்டுச்செல்கின்ற உயர் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காகப் பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரித்து சொல்லப்பட்ட சட்டத்தின் 25 அ என்னும் பிரிவின் கீழ் என்னால் ஆக்கப்பட்டு 2011, ஓகத்து 30 ஆந் தேதிய 1721/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையை, இக்கட்டளை மூலம் பின்வருமாறு திருத்துகின்றேன்.*

*1. இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு செத்தெம்பர் 15 ஆந் தேதியிலிருந்து 2011, ஓகத்து 29 ஆந் தேதி வரையிலான காலப்பகுதியின் போது SAITM மூலம் ரஸ்சியா, நிஷ்னி நொவ்கொரொட் ஸ்டேட் மெடிக்கல் அக்கடமியில் எம்.டீ. பட்டத்துக்காகக் கற்பதற்குப் பதிவு செய்யப்பட்டவர்களும், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்காகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களும் மற்றும் அவர்களின் கற்கைநெறியை SAITM இனால் அளிக்கப்படுகின்ற எம்.பீ.பீ.எஸ் பட்டத்துக்கு இட்டுச்செல்கின்றவொரு கற்கைநெறிக்கு மாற்றுவதற்கு உடன்படுகின்றவர்களுமான மாணவர்கள் தொடர்பில், அம்மாணவர்கள் தொடர்பாக மட்டுமே, மேற்கூறப்பட்ட கட்டளை எல்லா நோக்கங்களுக்காகவும் அத்தகைய மாணவர்கள் தொடர்பில் மட்டுமே இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாக 2009, செத்தெம்பர் 15 ஆந் நாளன்று பயனுடையதாக வந்துள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.*

2. மேற்கூறப்பட்ட கட்டளைக்கான அட்டவணையில்

(அ) 4 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தை உட்புகுத்துவதன் மூலமும்.

"4அ. நம்பிக்கைப் பொறுப்பு உறுதியை எழுதி நிறைவேற்றி SAITM இன் பங்குகளின் 51 சதவீதத்தை 2013, செத்தெம்பர் 26 ஆந் தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் அத்தகைய உறுதியின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நம்பிக்கை பொறுப்பொன்றுக்குக் கைமாற்றுதல்." ;

(ஆ) 6 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களை உட்பகுத்துவதன் மூலமும் :-

"6அ. 2013, செத்தெம்பர் 26 ஆந் தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் நிதிசார் மற்றும் தொழிற்படுசார் கைநூல்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் SAITM இன் நிதிசார் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல்.

6 ஆ. 2013, செத்தெம்பர் 26 ஆந் தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் கடன்களுக்கும் ஒப்புரவு மூலதனத்திற்கும் இடையிலான விகிதத்தை (மூலதனத் திரட்டு விகிதம்) 70 : 30 என்ற விகிதத்தில் அல்லது அதற்குக் குறைவாகச் சீர்செய்து, அதன்பின்னர் அத்தகைய விகிதத்தை 70 : 30 இல் அல்லது அதற்குக் குறைவாகத் தொடர்ந்தும் பேணி வருதல்." ; அத்துடன்

(இ) 7 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தை உட்புகுத்துவதன் மூலமும்.

"7அ. 2013, செத்தெம்பர் 26 ஆந் தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் எம்.பீ.பீ.எஸ் பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கு இயைபாகவுள்ள அவசியமான பாடப் புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் வழங்குவதன் மூலம் நூலக வசதிகளைச் சீராக்குதல்."

**அட்டவணை**

SAITM ஆனது, அம்மாணவர்களிடமிருந்து கற்கைநெறிக் கட்டணமாக ஏதேனும் மேலதிக விதிப்பனவின்றி, அத்தகைய மாணவர்கள் SAITM இனால் அளிக்கப்படுகின்ற எம்.பீ.பீ.எஸ் பட்டத்துக்குத் தகவுடையவர்களாக இருப்பதற்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதனை இயலச் செய்வதற்கென, இக்கட்டளையிற் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய மாணவர்கள் தொடர்பிலான, கற்கைக் காலப்பகுதியை இக்கட்டளைத் தேதியிலிருந்து ஓராண்டினால் நீடித்தல் வேண்டும்.

**திசாநாயக்க முதியான்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க,**
உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2013, செத்தெம்பர் 26

10 – 363

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.